செய்தி வெளியீடு எண்: 6 3 5 நாள் : 17. 12 .2014

# <u>பத்திரிக்கை செய்தி</u>

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று (17.12.2014) மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழகத்தில் இயங்கும் சிமெண்ட் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் சுற்றுச் சூழல் தொடர்பான செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்வாய்வு கூட்டத்தில் சிமெண்ட் ஆலைகளுக்கான காற்றுதர அளவுகள், ஆலைகளின் திடக்கழிவுகளை எரிபொருளாக உபயோகிக்க வேண்டிய அவசியம் குறித்தும், பெரு நிறுவன சமூகப் பொறுப்புகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் நல்லாசியோடு, வழிகாட்டுதலோடு இயங்கும் இவ்வரசு தமிழக மக்களின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்தும், இந்த ஆலைகளின் காற்று மாசு வெளிப்பாடு தர அளவுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும், சுற்றுச்சூழல் மேம்பாட்டில் பெரு நிறுவனம் சமூகப் பொறுப்புகளில் எந்த அளவுக்கு இந்த நிறுவனங்களின் பங்கு இருக்க வேண்டும் என்பது குறித்தும், தமிழகத்தில் தொழிற்சாலைகளில் இருந்து உற்பத்தியாகும் திடக்கழிவுகளின் உபயோகம் இந்த நிறுவனங்களின் எரிகலன்களில் பெருமளவில் இருக்கவேண்டும் என்றும் அவ்வாறு உபயோகப்படுத்தும் பொழுது

காற்று மாசு வெளிப்பாடு, வாரிய தர அளவுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் என்றும் மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. தோப்பு என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு அறிவுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

இவ்வாய்வு கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச்செயலர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் மற்றம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவர் திரு. கே.ஸ்கந்தன் இ.ஆ.ப., உறுப்பினர் செயலர் முனைவர் கே.கார்த்திகேயன், வாரிய உயர் அதிகாரிகள் மற்றும் சிமெண்ட் தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**